www.tamilarangam.net

# பொதுமை

மலர். 2 இதழ். 4
அன்பளிப்பு ரூபாய் 2
15-03-85
வெளியீடு:
ஈழப்புரட்சி அமைப்பு
EROS

ஈழத்தில் 15-03-85 வெளியான இவ்விதழ் கடல் கடந்து வாழும் தோழர்களுக்காக, சென்னையில் மறுபதிப்புச் செய்யப்பட்டு 10-6-85 அன்று வெளியிடப்பட்டது.

- **மூன்று இயக்கங்கள் ஒன்றிணைந்து நேரடி மோதலுக்குத் தயாராகிருர்கள்**
  —ஜயவர்த்தன அபாய அறிவிப்பு
- **பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்காவிட்டால் பிராந்தியத்தில் பதட்டநிலை உருவாகும்**
  —இந்தியா எச்சரிக்கை
- **ராஜீவ் - அத்துலத் முதலி இரகசிய பேச்சுவார்த்தை**
- **கூட்டணியினருடன் இனிமேல் பேசுவது பயன்தராது**
  —நெவில் கருத்து
- **இளைஞர்களின் தாக்குதல்களே மக்களை அழிவிலிருந்து காப்பாற்றுகிறது**
  —அமிர் அறிக்கை
- **'பயங்கரவாதத்திற்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு'**
  —அத்துலத் முதலி

இந்தச் செய்தித்தொடர்கள் அண்மைக்கால அரசியல் போக்கை எமக்கு நன்கு அம்பலப்படுத்துகின்றன. விடுதலை இயக்கங்களின் தாக்குதல்களை பேச்சுவார்த்தைமூலம் தடுத்து நிறுத்தப் போவதாக, அத்துலத் முதலி தற்போது கூறிவருகிருர். இதற்கு முன்னர் பிரேமதாசா முதலானேருடாக இக்கருத்து வெளிவந்திருந்தபோதும் அத்துலத் முதலியின் தற்போதைய அவசரத்துக்கு கனமான காரணம் உண்டு.

சில வாரங்களுக்கு முன்பு ஜயவர்த்தனவும், இதே அத்துலத் முதலியும் 'பயங்கரவாதத்திற்கு இராணுவத் தீர்வே கொடுக்கப்படும், என மிரட்டியிருந்தனர். இந்தக் காலங்களில் தான், பிரித்தானியாவிலிருந்து வேகமான கடற்படைப் படகு வாங்குவதற்கு ஏற்பாடுகள் நடந்திருந்தன. திருவனந்தபுரத்தில் தரித்து வந்த விமானமூடு 15,000 கிலோ நிறையான ஆயுதங்கள் குவிக்கப்பட்டிருந்தன; 30,000 சிங்களக் காடையர்களுக்கு ஆயுதங்கள் வழங்கி வடக்கு, கிழக்கில் குடியமர்த்த திட்டமிடப்பட்டிருந்தன. ஒரு போராளிக்கு 100 சிங்கள இராணுவம் என்ற விகிதத்தில் ஆட்சேர்த்து பயிற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இவ்வகை இராணுவத் தயாரிப்பில் ஈடுபட்டுவந்த அதே பேர்வழிகளே, இன்று திடீரென பேச்சுவார்த்தை பற்றி புலம்பத் தொடங்கியுள்ளனர்.

### பேச்சுவார்த்தையும், இராணுவத் தயாரிப்பும்

கடந்த காலங்களில், அமிர்தலிங்கத்துடன் கூடிப்பேசிய வேளைகளில், ஒருபுறம் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்த போது, மறுபுறம் மொசாத்தும், சின்பெத்தும் நுழைந்தன; பிரித்தானிய கூலிப்படைகள் வரவழைக்கப்பட்டன. தென்னுபிரிக்க ஆயுதங்களும் சீனுவின் பயிற்சிகளும் பெறப்பட்டிருந்தன.

இந்தத் தயாரிப்புகளின் பலாபலன்களை, பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தபோதே நாம் அனுபவித்திருக்கின்ருேம். வடக்குகிழக்கு பகுதிகளில் மொத்தம் 60,000 பேர் வரையில் அகதிகளாகியுள்ளனர். மன்னார் பகுதியில் மட்டும் 300 பேருக்குமேல் கொல்லப்பட்டுள்ளனர். வடபகுதியில் 61 மணி நேர ஊரடங்கை அமுலாக்கி கொலைகளும், கொள்ளைகளும், கற்பழிப்புகளும், கைதுகளும் சரளமாக நடைபெற்றிருந்தன.

இந்த அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு பார்க்குமிடத்து பேச்சுவார்த்தைகள், ஆட்சியாளர்கள் தமது இராணுவத்தயாரிப்பிற்கு கால அவகாசம் தேடவும், சர்வதேச அரங்கிற்குத் தனது 'ஜனநாயகத்தை' வெளிக்காட்டவும் பயன்படுத்துவதை உணரலாம்.

### மீண்டும் அதே தேவை

இத்தேவை ஜயவர்த்தனவிற்கும் அவரது சகாக்களுக்கும் மீண்டும் ஏற்பட்டிருப்பதனுலேயே பேச்சுவார்த்தை பற்றி மீண்டும் பேசப்படுகிறது. மூன்று இயக்கங்கள் ஒன்றிணைந்து, நேரடி மோதலுக்குத் தயாராகின்றனர். என்று கூறுவது, நம்மை நாமே தயார்ப்படுத்த வேண்டுமென்ற அர்த்தத்தையே தருகின்றது.

தனது ஆயத்த காலங்களில், விடுதலை இயக்கங்கள் பாரிய தாக்குதல்களை நிகழ்த்தாவண்ணம், இதுவரைகாலமும் தமிழ் மக்கள் சார்பில் அமிர்தலிங்கத்துடன் மட்டுமே பேசிக்கொண்டிருந்தபோது, விடுதலை இயக்கங்கள் தொடுத்த தாக்குதல்கள் சில குழப்பங்களைத் தோற்றுவித்தன. இதனுல், இனியும் அமிர்தலிங்கத்துடன் மட்டும் பேசுவதினுல் இயக்கங்களின் தாக்குதல்களை நிறுத்த முடியாது என உணர்ந்தநிலையில், இனிமேல் இயக்கப் பிரதிநிதிகளுடன் பேச வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டுவிட்டதெனலாம்.

கூட்டணியினருடன் பேசுவது இனிமேல் பலன் தராது என்ற நெவிலின் பேச்சு, இதனைத் துலக்கமாக எடுத்துக்காட்டுகிறது. இதனைப் புரிந்த நிலையில் அமிர்தலிங்கம், மார்க்சிய மார்க்கத்தில் ஈழத்தை அமைப்போம் என்று அராபிய சஞ்சிகைக்குப் பேட்டியளித்தும், இளைஞர்களின் தாக்குதல்களே மக்களை அழிவிலிருந்து காப்பாற்றுகிறது என்று சென்னையில் அறிக்கைவிட்டும், விடுதலைப் போராளிகள் பக்கம் தனது தலையைச் சாய்க்கத் தொடங்கியிருக்கிருர்.

### இருவழிகளில் முயற்சி

இந்நிலையில், இயக்கங்களை ஒரே மேசையில் அமர்த்திப் பேசவைக்க, இருவழிகளில் அரசு எத்தனித்து வருகின்றது.

முதலாவதாக, இராணுவத்தை வெளியேற்று, என்ற இயக்கங்களின் ஏகோபித்த வேண்டுகோளை, நடைமுறைக்குக் கொண்டுவர விருப்பதுபோல் காட்டிக்கொள்ளத் தொடங்கியிருக்கிறது. வடபகுதியில் இராணுவம் ஒழுங்கற்றிருக்கிறது என்றும், இதனுல் இதை வாபஸ் பெறப்போவதாகவும் அண்மையில் ஜே. ஆர். அறிவித்திருப்பது, இந்த வழிமுறையை ஊர்ஜிதம் செய்து நிற்கின்றது.

இரண்டாவதாக, இந்தியாவின் துணையுடன் போராளிகளை பேச்சுக்கு வரவழைக்க முயற்சிப்பது தெரிகின்றது. அத்துலத் முதலி, ராஜீவ் ஆகியோரின் இரகசியப் பேச்சு, இதற்கான முன்னெடுப்பாகவே அரசியல் வட்டாரங்கள் அனுமானித்துள்ளன. இது உண்மையெனில், இந்தியா தற்பொழுது பேச்சுவார்த்தையை வற்புறுத்தி வருவது, இப்போக்கிற்கு அடியெடுத்துக் கொடுப்பதாகவே இருக்கும்.

ஆகவே, ஜயவர்த்தனவின் சொற்பகால இராணுவ வாபஸ் நாடகமும், இந்தியாவின் விருப்பமும் இரண்டறக் கலக்கும்போது, இயக்கங்கள் தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும்.

### எடுக்கவேண்டிய தீர்மானம்

ஜயவர்த்தன தரப்பில், இராணுவ வலுவூட்டலுக்கு இவ்வகை பேச்சுவார்த்தைகள் இடமளிக்கும் அதேநேரம், இயக்கங்களைப் பொறுத்த வரையில், இன்று மக்கள் மத்தியிலும், சர்வதேச அரங்கிலும் நிலவிவந்துள்ள 'இயக்கங்கள், வெறும் ஆயுதக்குழுக்கள்' என்ற கணிப்பீடு, இவர்களை அரசியல் இராணுவ இயக்கங்களாக தரமுயர்த்தவும் மக்கள் மீதான இராணுவக் கெடுபிடிகளை தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தவும் வகை செய்யும் என்பதில் ஐயமில்லை.

## பேச்சு வார்த்தை நடக்குமா?

## விடுதலை இயக்கங்கள் கலந்துகொள்ளுமா?

**இந்தச் சூழ்நிலையை விடுதலைப் போராளிகள் கையாள முனையும்போது, ஐக்கியத்தின் அவசியமே முன்னெழுந்து நிற்கின்றது. ஒருங்கிணைந்த திட்டங்களை இயக்கங்கள் களத்தில் காட்டாத போதிலும், தற்போது எழுந்துள்ள நிலைமையில் ஏகோபித்த கருத்தைக் கொண்டிருக்கவில்லையாயின் எதிர்காலத்தில் ஆபத்து நிச்சயம்.**

### கவனிக்க

அண்மையில் எம்மை ஈழப்புரட்சி மாணவர் ஸ்தாபனம் (Eelam Revolutionary Organisation of Students) என்றும் தமிழீழ மாணவர் புரட்சிகர ஸ்தாபனம் என்றும் தவருக உபயோகித்து; குறிப்பாக இந்தியாவிலும் இலங்கையிலும் இதர நாடுகளிலும் பத்திரிகையூடாகவும் வானெலியூடாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. அத்துடன் கொள்ளைகளிலும் தனிநபர் கொலைகளிலும் நாம் ஈடுபட்டுள்ளதாகவும் ஐலண்ட் பத்திரிகையில் வெளிவந்த செய்தி முற்றிலும் தவருனதாகும். இது தொடர்பாக திரிவுபடுத்தப்பட்டுள்ள எமது இயக்கப் பெயரையும் நடவடிக்கையும் சுட்டிக்காட்ட வேண்டிய நிலைப்பாடு எமக்குண்டு.

**எமது இயக்கத்தின் பெயர் ஈழப்புரட்சி அமைப்பு (Eelam Revolutionary Organisation ஆகும். ஈரோஸ் (EROS) என எம்மை சுருக்கமாக அழைத்துக் கொள்கிருேம். ஈரோஸ் என்ற சொல்லுக்கு ஒருங்கிணைக்கும் சக்தி என்ற பொருள் உலக வழக்கில் உண்டு.**

அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் சிறிலங்கா அரசை நிலைகுலைக்கும் வகையான தாக்குதல்களையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிருேம். விழிப்புணர்வு பெற்ற மக்களெழுச்சிக்காக எம்மை அர்ப்பணித்து அவர்கள் மீதே ஆதாரப்பட்டிருக்கும் நாம்; வங்கிகளையோ, கோவில்களையோ, இதர நிலையங்களையோ கொள்ளையிடவேண்டிய அவசியம் எள்ளளவும் எமக்கில்லை என்பதை உறுதியுடன் கூறிவைக்கிருேம்.

—ஈழப்புரட்சி அமைப்பு

**கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால், சக்தியாய் உருவெடுக்கும்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திகள்

## இலங்கையை நட்டாற்றில் கைவிடவும் அமெரிக்கா தயங்காது

இலங்கையின் இனப்பிரச்சனையின் தீர்வுக்கான திறவுகோல், டில்லியிலும், சென்னையிலுமே உண்டு. இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு மூன்று அணுகுமுறைகளே உண்டு. அவை இராணுவ நடவடிக்கை, தமிழ்த் தலைமைகளுடனான பேச்சுவார்த்தையும் சிங்கள மக்களிடையே ஒருமைப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தி ஏற்றுக்கொள்ளச் செய்வதுமான நடவடிக்கைகள், தமிழ் மக்களுக்கு நிர்வாக ரீதியிலான அதிகாரங்களை வழங்குதல் என்பனவாகும். இனப்பிரச்சனைக்கான தீர்வில் இந்தியாவைக் கலந்தாலோசிப்பது அவசியமானது. இந்தியாவின் எதிர்ப்பைச் சம்பாதிப்பது இலங்கை அரசுக்கு ஆபத்தானது. இந்தியாவின் நட்பைப் பெறுவதற்காக, இலங்கையை நட்டாற்றில் கைவிடவும் அமெரிக்கா தயங்காது என, இலங்கைப் பறங்கியர் இனத்தைச் சேர்ந்த பேராசிரியர் ருல்ப் புல்ட்ஜன்ஸ் கூறியுள்ளார்.

## முஸ்லிம்களும் ஒன்றுபட்டுப் போராட வேண்டும்

சிறீலங்கா அரசின் புதிய குடியேற்ற திட்ட நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் இளைஞர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். கொழும்பு ரன்முத்து ஹொட்டலில் நடைபெற்ற, முஸ்லிம் இளைஞர்களின் கருத்தரங்கில், முஸ்லிம் இளைஞர் ஒன்றியத்தின் தலைவர் ஜனாப் எம்.ஐ.எம். மொகைதீன் பேசுகையில் அரசின் குடியேற்றத் திட்டங்கள், தமிழ் மக்களை மட்டுமின்றி முஸ்லிம்களையும் பாதிக்கும் எனவும், எனவே முஸ்லிம்களும் தமது உரிமைகளுக்காக ஒன்றுபட்டுப் போராட வேண்டுமெனவும் கூறினார்.

இனப்பிரச்சனையைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பதாகக் கூறிக்கொண்டு, சிங்கள மக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுவதைக் கண்டித்தும் பேசினார். இக்கருத்தரங்கில், முன்னாள் செனட்டர் ஜனாப் மசூர் மௌலானா, ஜனாப் நிலாம்டீன் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்.

## மலையக மக்களை கேவலப்படுத்த திட்டமிட்ட சதி

நாட்டில் எழுந்துள்ள இனப்பிரச்சனைக்கு, உறுதியான அரசியல் தீர்வு காண்பதன் மூலமே நிலவும் பதட்ட நிலையை போக்கமுடியும். ஆயுதப் பலப்பரீட்சை மூலம் பொதுமக்களே பாதிக்கப்படுவார்கள். இந்த நாட்டின் சுதந்திரத்தையும், பொருளாதார வளத்தையும் பாதுகாப்பதற்காக மலையகமக்கள் தியாகத்தன்மையுடன் தமது உழைப்பையும் வாரி வழங்கியுள்ளனர்.

மலையகமக்களைத் தூண்டிவிட்டு ஊர்வலம் நடத்துவதன் மூலம் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது எனத் தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் அய்யாத்துரை அறிக்கை விடுத்துள்ளார்.

இவர் தமது அறிக்கையில், இன்று மலையக மக்களை அரசியல்வாதிகளும், சுயநலவாதிகளும், பிரிவினைக்குத் தாங்கள் எதிரானவர்கள் என்று, ஊர்வலம் நடத்திக்காட்டும்படி தூண்டுவது அம்மக்களை உலக அரங்கில் கேவலப்படுத்தும் ஒரு செயல் எனவும், குடியுரிமை முதல் மனித உரிமை வரை பறிக்கப்பட்ட நிலையில், மலையக மக்களுக்கு தேர்தலின் போது மட்டும் அரசியல்வாதிகளால் ஆசைவார்த்தைகள் கூறப்படுவதும் தேர்தலின் பின்னர் அவர்களுக்கு விரோதமாகப் பாராளுமன்றத்தில் குரலெழுப்புவதும் இம்மக்களுக்குப் பாதகமான சட்டங்களைக் கொண்டு வருவதும், நாட்டை விட்டு வெளியேற வேண்டுமெனப் பேசுவதும், வழமையாகிவிட்டதெனவும், அரசியல் அனாதைகளாகவும், மனித உரிமையில் அடிமைகளாகவும் ஆக்கப்பட்டுள்ள மலையக மக்களைப் போன்ற ஒரு சமூகம் உலகில் வேறெங்கும் வாழ்கின்றதா என்ற ஐயம் மேலெழுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மலையகமக்களின் உழைப்பை உறிஞ்சி ஏப்பம் விடும் அரசியல்வாதிகளும் சுயநலவாதிகளும் சகல துறைகளிலும், இம்மக்களை ஒதுக்கி வைத்துவிட்டுப் பிரிவினைக்கெதிராக ஊர்வலம் நடத்தி நிரூபிக்கவேண்டும் என வற்புறுத்துவதும், தொலைகாட்சியிலும் வானொலியிலும் பேட்டியளித்துப் பகிரங்கப் படுத்துவதும் இம்மக்களை உலக அரங்கில் திட்டமிட்டுக் கேவலப்படுத்தும் ஒரு சதி முயற்சி எனக் கருதுவதாகவும், இவ்விடயத்தில் மலையக மக்கள் இவ்வாறான சதி முயற்சிகளுக்கு உடந்தையாகாமல், எச்சரிக்கையாக இருக்கவேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

## சிங்களக் காடையர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் பெண்களுக்கும் ஆயுதப் பயிற்சி !

### பிரேமதாசாவின் மனைவிக்கும் ஆயுதப் பயிற்சி !

இந்த ஆண்டில் வடக்கு, கிழக்கில் 30,000 சிங்களக்காடையர் குடும்பங்கள் குடியேற்றப்பட இருக்கும் திட்டத்தில், தற்சமயம் 3,000 குடும்பங்களே முதலில் குடியமர்த்தப் படுவார்களென அத்துலத் முதலி அறிவித்துள்ளார். இதில் 2,00,000 பேரை வவுனியாவிற்கும், ஆனையிறவுக்கும் இடையில் விரைவில் குடியேற்றப் போவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

இத்தகைய குடியேற்றங்களுக்கும், அரசநிர்வாகிகளுக்கும் நீர்கொழும்பு, கொழும்பு, களுத்துறை, தியத்தலாவை ஆகிய இடங்களை பிரதான மையங்களாக கொண்டு அரசாங்க நிர்வாகிகளுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு பிஸ்டல், றைபிள், எஸ்.எம் ஜி. மோட்டார் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரேமதாசாவின் மனைவி ஹேமாவிற்கும் வேறுசில முக்கியஸ்தர்களின் பெண்களுக்கும் ஒரு மாதகால ஆயுதப்பயிற்சி வழங்கப்பட்டுவருகிறது.

## சில குரல்கள்

### கூட்டுறவுச் சங்கக் கொள்ளைகளைக் கண்டித்து கதவடைப்பு 22-02-85

இன்றைய நிலையில் எமது தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவு சங்கம் பல துறைகளிலும் மக்களுக்கு சேவை புரிந்து வருகின்றதை யாவரும் நன்கறிவீர். இத்தாபனம் அடிக்கடி ரொக்கமாகவும் பொருட்களாகவும் கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றது. இக்கதை தொடர்கதையாக நீடிப்பதினால் எமது சங்கத்தை இழுத்து மூடிவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

கொள்ளையினால், எமது மக்களே முற்றுகப் பாதிப்புக்குள்ளாகின்றனர். தற்சமயம் காங்கேசன் துறையால் மா, சீனி, அரிசி போன்ற உணவுப் பொருட்கள் வந்துள்ளன. இவற்றை இறக்கி, வெளியே வினியோகம் செய்வதற்கு எரிபொருள் அத்தியாவசியம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. எதிர் வரும் காலத்தில், எமக்கு எரிபொருள் வினியோகிக்க மாட்டார்கள். இவற்றை எல்லாம் மக்கள் நன்கு உணர வேண்டும். கொள்ளைகள் தொடர்ந்து நீடிக்காது தடுத்து நிறுத்த, உண்மையிலேயே எமது இனத்திற்கு ஒளிமயமான எதிர்காலத்தை காண விரும்பி உழைக்கின்ற அனைவரும், உடன் முன்வர வேண்டும். கொள்ளைகளானாலும் சரி, வாகனக் கடத்தல்களானாலும் சரி, எதுவாகிலும் உடன்நிறுத்தப்படல் வேண்டும். அல்லாவிடில், நாம் மேற்கொள்ளும் செயற்பாடுகள் யாவும் விழலுக்கு இறைத்த நீரேயாகும்.

ஆகவே இவற்றை எல்லாம் உணராமல் நடைபெறும் கொள்ளைகளைக் கண்டித்து, 22-02-1985 வெள்ளிக்கிழமை, தெல் பலநோ.கூ.சங்கக் கிளைகள், மொத்த நிலையம் கந்தோர் ஆகிய யாவும் பூட்டுவதாகத் தீர்மானித்துள்ளோம். இந்த நியாயமான நடவடிக்கைக்கு ஏனைய வர்த்தக தாபனங்கள், பாவனையாளர்கள் அனைவரும் ஆதரவு நல்கி ஒத்துழைக்கும்படி கோருகின்றோம்.

தெல் ப.நோ.கூ. சங்கம்
தெல்லிப்பளை 20-02-1985
இங்ஙனம்
தலைவர், இயக்குநர், பணியாளர்

### சீர்குலையும் சிவில் நிர்வாகத்தைச் சீராக்குவோம்

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை காரணமாகவும், அரசின் கவனக்குறைவு காரணமாகவும் நாட்டின் சிவில் நிர்வாகம் சீர்குலைந்து வருகின்றது. அரச அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள், உயர் அதிகார பீடங்கள் ஆகியன செயலிழந்து வருகின்றன. இதனால் நாடு முழுவதிலுமே, குறிப்பாகத் தமிழ்ப் பிரேதசங்கள் அனைத்திலுமே, திருட்டு, கொள்ளை, கொலை, கற்பழிப்பு, விபச்சாரம் போன்ற சமூகவிரோதச் செயல்களும், சிறுசிறு சண்டை சச்சரவுகளும் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. இவ்வாறான மக்கள்விரோத, சமூக விரோத சக்திகளது நடவடிக்கைகளினால் அனைத்து தமிழ் மக்களுமே நாளாந்தம் பல இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இவ்வாறான சமூகவிரோதச் செயல்களை இல்லாதொழிப்பதற்கும் சண்டைகளைத் தீர்ப்பதற்கும், பல சமூக சேவை ஸ்தாபனங்களும் மேலும் பல அரசியல் சக்திகளும் இடைவிடாது பலவழிகளில் முயன்று வருவது கண்கூடு. ஆனாலும் சமூக விரோதச் செயல்களும், சண்டை சச்சரவுகளும் எங்கும் குறிப்பிடத்தக்க அளவு குறைந்ததாக இல்லை. மாறாகச் சில இடங்களில் அதிகரித்தே வருகின்றன. மேலும், மக்கள் ஆதரவுடன் கூடிய ஒரு போராட்டம் நடைபெறும் போது, இவ்வாறான சிவில் நிர்வாகச் சீர்குலைவுகள் அதிகரிப்பது இயல்பானதே. இவ்வாறான செயல்கள் இடம்பெருத வரலாற்றுப் போராட்டங்கள் எதுவுமே இல்லையெனலாம்.

இந்த நடைமுறை பிரச்சனையை, களவெடுத்தவர்களையும், கொலை, கொள்ளை செய்தவர்களையும், விபச்சாரிகளையும் மக்கள் மத்தியில் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பவர்களையும் கொன்று குவிப்பதின் மூலம் மட்டுமே தீர்த்துக் கட்டிவிட முடியாது. மக்களே இச்செயல்களைக் கண்காணித்து அழித்தொழிக்கும் நிலை உருவாக வேண்டும்.

இந்த முயற்சியின் ஓர் அங்கமாகவே, சமூக சேவையில் ஆர்வமுள்ள நாம், கிராமங்களிலும், நகரங்களிலும் தெரிந்தெடுக்கப்பட்ட குறிச்சிகளிலும் அவ்வப்பகுதி மக்களாலேயே அங்கீகரிக்கப்பட்ட நபர்களைக் கொண்டு, ''விழிப்பு மன்றம்'' எனும் பெயருடைய சிவில் நிர்வாக அமைப்பினை அமைத்து, சமூக விரோத ஒழிப்பு வேலைகளையும் மக்கள் மத்தியில் முரண்பாடுகளைத் தீர்க்கும் வேலைகளையும் பல இடங்களில் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளோம். காலப்போக்கில் கிராமங்களினதும், நகரங்களினதும் நிர்வாக அமைப்புக்களை அவதானிக்கும் பொறுப்பேற்கும் அமைப்புக்களாக, இவ்விழிப்பு மன்றங்களை மாற்றும் முயற்சியில் ஈடுபடலாம்.

மேலும் பல்வேறு தேசிய விடுதலை இயக்கங்கள் அனாவசியமான நேரத்தையும் சக்தியையும், சிறுசிறு சச்சரவுகளுக்குச் செலவிடும் நிலையைத் தவிர்த்து, அவ்வப்பகுதிகளில் தோன்றும் சகல பிரச்சனைகளையும் அவ்வப்பகுதி மக்களாலேயே தெளிவாக ஆராயப்பட்டுத் தீர்க்கப்படும் நிலை உருவாக வேண்டும்.

அரசியல் முரண்பாடுகளுக்கப்பால், சகல மக்களினதும் நலன்களையும் உத்தரவாதப்படுத்தும் வகையில், உருவாக்கப்படும் விழிப்புமன்ற அமைப்பில், உங்கள் பிரதேச நலன்களையும் இணைத்துச் செயற்படுங்கள். மக்களே தங்கள் பிரச்சனைகளைக் கையாளும் நிலையை உருவாக்குங்கள். மக்கள் சுயமாகவோ அல்லது எமது தொடர்ச்சியான ஒத்துழைப்புடனே, விழிப்பு மன்றங்களை நாடு முழுவதும் அமைத்து, மக்கள் நலனை உத்தரவாதப்படுத்த உதவிக்கரம் கொடுக்க அனைத்து அரசியல் சக்திகளும் சமூக நலன் விரும்பிகளும் முன் வருவார்களென எதிர்பார்க்கின்றோம்.

—விழிப்புமன்ற அமைப்பாளர் குழு

### தமிழ்மக்களின் அவலக் குரல்

தமிழ்த் தேசியத் இனத்தின் விடுதலைப் போராட்டம் கூர்மைப்பட்டுவரும் இந்த நேரத்தில், அதனையும் அதன் இலட்சியத்தையும் அதலபாதாளத்துள் ஆழ்த்தும் அநாகரிக, அராஜகச் சம்பவங்களும் அதிகரித்து வருவது, ஆழ்ந்த கவலைக்கும் அக்கறைக்கும் உரியதொன்றுகிறது.

அண்மைக் காலத்தில் யாழ்நகரில் வாகனக் கடத்தல்களும் கூட்டுறவு தனிப்பட்ட கொள்ளைகளும் நாளாந்த சம்பவங்களாகிவிட்டன. இவை இயக்கங்களால் நடத்தப்படுகின்றனவா அல்லது இயக்கங்களின் பெயரைப் பயன்படுத்தி நடத்தப்படுகின்றனவா என்பது ஒரு பெரிய கேள்விக்குறி. தவிர, இவற்றை இயக்கங்களே நடத்துகின்றன என்னும் போது, ஏன் எதற்கு என்ற கேள்விகளுக்கும் சரியான விடையில்லை. துப்பாக்கி முனையால் சகலதையுமே சாதிக்கலாம் என எதிர்பார்ப்பது மிக அறியாமையாகும். அதுவும், பொதுமக்களுக்கு எதிராக துப்பாக்கிகளை உயர்த்துவதும் அவற்றை, தனி நலன்களுக்காக ஏந்துவதும் துப்பாக்கிகளையும் போராட்டத்தையும் கேவலப்படுத்துவதாகும். துப்பாக்கிக் குழலில் இருந்தே அரசியல் அதிகாரம் பிறக்கிறது என்ற மாவோவின் தீர்க்கமான கருத்து, இத்தகைய சம்பவங்களால் பயங்கரமாகக் கொச்சைப் படுத்தப்பட்டு விடுகிறது.

—தமிழ் மக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாவரும் கேளிரென...

இன்று ஈழவரின் மீதான அடக்குமுறைகள் அதிகரித்துவரும் வேளையில் சமூக பொருளாதார அரசியல் காரணிகளால் மட்டுமன்றி சரீர ஆத்மார்த்த ரீதியிலும் பெரும் தாக்கத்துக்குட்பட்டிருக்கும் நம்மவரிடையே இயக்கங்களுக்கிடையிலான ஐக்கியப்பாட்டின் அவசியம் பற்றிய கருத்து வலுவடைந்து வருவதனை உணர முடிகிறது. ஆழமான கருத்தோட்டத்தை நாம் முன்வைக்க வேண்டியது அவசியம்.

முதலில் இயக்கம் என்றால் என்ன? அது போராளிகளை எவ்வகையில் இனங்கண்டு உருவாக்குகிறது? என்ற விடயங்களை கவனித்து அதனடிப்படையில் ஐக்கியம் பற்றிய சாத்தியப்பாட்டை விளக்குவதே பொருத்தமானது.

## இயக்கம் என்றால் என்ன?

**1. ஒரு தெளிவான அரசியல் கொள்கை, அதனடிப்படையிலான கோரிக்கை, அதை முன்னெடுத்துச் செல்லும் உறுப்பினர்களை உருவாக்கவும் மக்களை அணிதிரட்டவும் முன்வைக்கும் மறைமுக வேலைத் திட்டங்கள்.**

**2. இக்கோரிக்கையை வென்றெடுக்க மேற்கொள்ளும் வெளிப்படையான அரசியல் இராணுவ நடவடிக்கைகள்.**

**3. சர்வதேச ரீதியில் இயக்கக் கொள்கையினாலும் நடவடிக்கையினாலும் ஏற்படும் செல்வாக்கு.**

ஆகிய காரணிகளினாலேயே ஒரு இயக்கம் வரையறுக்கப்படுவதும், விமர்சிக்கப்படுவதும் முறையாக இருக்கிறது.

## இயக்கங்களின் தோற்றமும் நோக்கும்

எழுபதுகளின் ஆரம்பத்தில் இருந்தே ஆயுதந்தாங்கிய நடவடிக்கைகள் ஆரம்பித்தாலும் இது ஈழக்கோரிக்கையாக எழுபத்தைந்தின் பின்பே உருப்பெற்றது. 5 செப்ரெம்பர் 74 இல் புதிய தமிழ்ப் புலிகள் (T.N.T) என்ற பெயரில் தோற்றம் பெற்று இயங்கியோரும் (ஆதாரம்: அமரர் இராசரத்தினம் டயறி) 75 அக்டோபரில் முத்துக்குமாரசாமியினால் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கமும் 75 நவம்பர் 23 இல் பிரகடனம் செய்யப்பட்ட ஈரோஸினதும் செயற்பாடுகள் 76 இல் வட்டுக்கோட்டை மாநாட்டைக் கூட்டி தமிழீழ தீர்மானம் எடுக்க தமிழர் கூட்டணியை நிர்ப்பந்தம் செய்தன.

இவ்வாறாக 75 இன் பின் உருப்பெற்ற ஈழக் கோரிக்கையில் ஆரம்பம் முதலே இருவிதமான போக்குகளை காணுதல் முடியும். வாக்குரிமையும் குடியுரிமையும் இழந்து வறுமைக் கோட்டிற்கு கீழ்வாழும் மலையக மக்களை முன்னணியாகவும் வடக்கு கிழக்கில் வாழும் தொழிலாள விவசாயிகளை அவர்களுடன் இணைந்தும் போராட வடக்கு, கிழக்கு மலையகத்தை உள்ளடக்கிய பிரதேசத்தை ஈழம் என அழைத்த ஈரோஸ் இயக்கம் அதற்கான ஆயுதப் போராட்டத்தயாரிப்பில் ஈடுபட ஆரம்பித்தது. அதே நேரம் வடபகுதி இளைஞர்களை பெரிதும் பாதித்த தரப்படுத்தலையும், மொழியுரிமையையும் முன்வைத்து வடக்கு கிழக்கை உள்ளடக்கிய பிரதேசத்தை 'தமிழீழம்' என அழைத்து அகிம்சை மார்க்கத்திலும், ஆயுத நடவடிக்கை யூடாகவும் முறையே தமிழர் கூட்டணியினரும் புலிகள் இயக்கமும் செயற்படலாயின. காலப் போக்கில் அகிம்சை மார்க்கம் மங்கிப்போக புலிகளின் ஆயுத நடவடிக்கைகள் கவர்ச்சி நிலையை எய்தின.

இவ்விரு போக்குகளிலும் ஆயுதப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து மறைமுக இயக்கங்களாக உருவாகி வந்த ஈரோசும், புலியும் சமரசம்காண எடுக்கப்பட்ட முயற்சிகள் முளையிலேயே முறிந்துபோயிற்று.

## உறுப்பினர்களை உருவாக்கும் வழிமுறைகள்

ஈரோஸ் தனது கருத்தை முன்வைத்தபோது அதை ஏற்றுக்கொண்டு செயற்பட முன்வந்தவர்களை வடக்கு, கிழக்கு மலையகப்பகுதிகளில் கூட்டுறவு முறையில் உருவாக்கப்பட்ட பண்ணைத்திட்டங்களிலும் கைத்தொழில் திட்டங்களிலும் வெளியீட்டுத்துறைகளிலும் ஆரம்பத்தில் ஈடுபடவைத்து அதனூடாக ஆள் தெரிவை செய்து ஆயுதப்பயிற்சியளிப்பதையே தனது போக்காகக் கருதிச் செயற்பட்டது. இது 1977 இல் தனது மாணவ அமைப்பாக ஈழமாணவர் பொது மன்றத்தை (GUES) பிரகடனப்படுத்தி பகிரங்கமாக மாணவர் மத்தியில் செயற்படவும் செய்தது. இவ்வகை அணுகு முறைகளில் தோழர்களை அரசியல் இராணுவ துறைகளில் வளர்த்தெடுத்து அறிவு ரீதியில் இயல்பான கட்டுப்பாட்டை எட்டமுடியுமென்பதில் அசையாத நம்பிக்கையுடன் செயற்படலானது.

விடுதலைப் புலிகள் தமது இராணுவத் தாக்குதல் மூலம் தம்மை வெளிப்படுத்தி அவற்றை மையமாக வைத்து பிரச்சாரம் செய்து உறுப்பினர்களை தெரிவு செய்து இறுக்கமான இராணுவக்கட்டுப்பாட்டூடாக தமது இயக்கத்தை வளர்க்க முற்பட்டது. கெரில்லாப்போர் முறையிலுள்ள தாக்குதலும் தப்பித்தலும், என்ற வழிமுறையைக் கையாண்டு இவர்கள் தம்மை வளர்க்கலானார்கள்.

## இருசாரரிலும் ஏற்பட்ட பிளவு

படிப்படியாக தமது போக்கில் வளர்ந்துவந்த இவ்விரு சாராரும் 1980-ம் ஆண்டில் தமது இயக்கங்களில் பிளவுகளைச் சந்தித்தனர்.

ஈரோஸின் மாணவ அமைப்பாக இருந்த ஈழ மாணவர் பொதுமன்றத்தின் உறுப்பினர்கள் பலர் ஈரோஸ் தலைமை மீது குற்றஞ்சாட்டியபடியே பிரிந்து சென்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை (EPRLF) ஆரம்பித்து அதற்குத் தலைமை தாங்கினர். இவர்கள் ஈரோஸின் சில கருத்துகளை முன்வைத்து பிரச்சாரம் செய்து ஆட் சேர்ப்பு நடாத்தினர். ஆயுதப் பயிற்சியும் வழங்கினர். இவர்கள் சில தேவைகளின் நிமித்தம் இராணுவத்தாக்குதல்களை இன்று நடாத்தி வருகின்றனர்.

விடுதலைப்புலிகள் 'தாக்குதலும் தப்பித்தலும்) முறையை நிராகரித்து பிரிந்து சென்றவர்கள். 'தம்மை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்' (PLOT) என அழைத்து, 'ஒட்டுமொத்தமான ஒரே தாக்குதல்' தொடுக்க தம்மை தயார்செய்து வருவதாக பிரச்சாரம் செய்துவருகின்றனர். இவர்கள் இத்தாக்குதலுக்காக அதிகப்படியான ஆட்களை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணப்பாட்டில் செயற்பட்டு வருவது வெளிப்படையாக இருக்கிறது. ஆயினும் இதை தற்போது தனித்துத் தாமே செய்துமுடிக்க இயலாதெனவும் இதற்கு ஏனைய இயக்கங்களின் இணைப்பு அவசியமெவும் தமது பிரச்சார ஏடான 'புதிய பாதையில்' கருத்து வெளியிட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலை இயக்கத்தினரை (TELO) பொறுத்தவரையில் புலிகளின் பாணியிலான தாக்குதல்களை முதன்மைப்படுத்தி, பெரிய இலக்குகளை தெரிந்து தாக்குவோராக விளங்குகின்றனர். இவர்கள் இத்தகைய தாக்குதல்களையே குறிக்கோளாகக் கொண்டு, ஆட்சேகரிப்பு நடாத்தி வருகின்றனர்.

இவ்வாறாக, வெவ்வேறான இயக்கங்கள் ஈழப்போராட்டத்தை வெவ்வேறு பாதைகளில் முன்னெடுக்க முனையும்போது, சில இயக்கங்கள் ஆட்சேர்ப்பில் கையாளும் வழிவகைகள் ஐக்கியத்துக்கு ஒரு சோதனையாகி விடுகின்றன.

## புதிய சக்திகள்...?

இன்று சில இயக்கங்கள் தமது கொள்கைகளினாலும், தாம் முன்வைத்த கோரிக்கைகளினாலும், அரசியல், இராணுவ நடவடிக்கைகளினாலும் ஓரளவு நிறுவனமயப்பட்டிருப்பது தெரிகிறது. இவை இப்போது தம்மை விஸ்தீரணப்படுத்தும் பாங்கில், புதியவர்களை தம்பக்கம் ஈர்க்கும் கைங்கர்யங்களில் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றன. இவ்வேளையில் இயக்கங்களுக்குள் நுழைய முயலும் புதியவர்கள் பின்வரும் தேவைகளை தம்மகத்தே கொண்டு வருவதைக் காணலாம்.

**1. கொள்கையிலும் கோரிக்கையிலும் கொண்டுள்ள பற்று.**

**2. இயக்கம் தொடுத்த இராணுவ நடவடிக்கைகளினால் பெற்ற கவர்ச்சி.**

**3. இயக்கம் வரலாற்றிலும், முன்னணி உறுப்பினர்களிடத்திலும் கொண்டுள்ள நம்பிக்கை**

**4. தமக்கு ஏற்பட்ட பாதுகாப்பற்ற நிலைமை**

**5. தனிப்பட்ட வாழ்வில் ஏற்பட்ட தடங்கலும் விரக்தியும்**

**6. சமூக அந்தஸ்து அல்லது தற்காலிக தேவை, அல்லது சுயவிளம்பரம்**

இத்தகைய ஆறு வகைப்பட்ட வழிகளிலும் இயக்கங்களில் புகுவோரில் முதல் மூன்று வகைப்பட்டோராலும் இயக்கம் பெரும் பாதிப்பை எதிர் நோக்க வேண்டியிருக்காது. ஆனால் இறுதி மூன்று காரணங்களுக்காகவும் இயக்கத்தில் சேருவோரையிட்டு மிகுந்த எச்சரிக்கை அவசியமாகிறது. இத்தகைய காரணங்களுக்காக இயக்கத்தை நாடுவோரை தடுத்து நிறுத்தி இயக்கக்கொள்கை கோட்பாடுகளில் நம்பிக்கையூட்டி இயக்கத்தின் அன்றாடச் செயற்பாடுகளினூடாக இவர்களது நேர்மையான அர்ப்பணிப்பை பரிசீலனை செய்து, அதன் பின்னரே பொறுப்புடையவர்களாக மாற்றுதல் வேண்டும்.

இந்தத் தெரிவை சரிவரச் செய்யாத பல இயக்கங்களினாலேயே இன்று ஈழப்போராட்டமே வெறும் குதர்க்கமாகும் அபாயம் தோன்றியுள்ளது.

இன்று ஆட்சேர்ப்பில் இயக்கங்களுகிடையிலான போட்டி கோஷ்டி மனப்பான்மை தெளிவான சித்தாந்தப் பார்வையற்ற துடிப்பு என்பவை இயக்க முன்னணி உறுப்பினர்களை ஆட்கொண்டிருப்பதால், நபர்களை இணைத்துச் செல்வதே தற்போதைய தேவை என்ற எண்ணத்தில், இயக்கங்கள் செயற்படுவதனை உணர முடிகிறது. அதாவது அரசியல் மயப்படுத்துதல் என்றால் எமது இயக்கத்தின் அரசியல் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளச் செய்தல் என்றும் மக்களை அணிதிரட்டுதல் என்றால் எமது இயக்கத்திற்கு ஆட்சேர்த்தல் என்ற அர்த்தத்திலும் கொச்சைத்தனமான விளக்கத்தின் அடிப்படையிலான செயற்பாடுகளே இன்று பெரும்பலான இயக்க முன்னணி உறுப்பினர்களைப் பீடித்துக் கொண்டுள்ளது என்பதைக் காண முடிகிறது.

இதன் விளைவாக தனிநபர்களின் கடந்த கால வரலாற்று நேர்மை என்பவை பற்றி இயக்கங்கள் கவலைப்படுவதில்லை. இதனால் போராளிகள் என்ற போர்வைக்குள் தவறான போக்குடையவர்களும் ஒளிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது. இத்தகைய சக்திகளின் நாளாந்த நடவடிக்கைகள் இயக்கத்தலைமையின் கருத்துக்கும் போக்கிற்கும் மாறாக இருந்தாலும் கூட, தங்கள் இயக்கத் தோழன் என்ற வகையில் மக்கள் மத்தியில் இனங்காட்டத் தயங்கும் போக்கு இச்சக்திகளை மேலும் வளர்க்கப் பயன்படுகிறது. இன்னும் சில இடங்களில் இயக்கத் தலைமைகளே தமது நிதித் தேவைக்கும் வேறு சில தேவைகளுக்கும் இத்தகைய சக்திகளைப் பயன்படுத்தி வருகிறது.

இவ்வாறாக, தெளிவான, முற்போக்கான கருத்துகளைக் கொண்டுள்ள சக்திகளும் அப்பாவித்தனமான, ஆனால் அர்ப்பணிக்கத் தயங்காத சக்திகளும் இருக்கும் அதேநேரம், சந்தர்ப்பவாதப் போக்குடைய தெளிவற்ற தீய சக்திகளும், இன்று சில இயக்கங்களில் காணப்படுகின்றன. இவ்வகையில், இயக்கங்களில் நல்லசக்திகளும் சமூகவிரோத சக்திகளும் முட்டி மோதி வருகின்றன. உட்கட்சிச் சண்டைகளும் சூடுபாடுகளும் இதனையே காட்டுகின்றன. குறிப்பிட்ட ஒரு இயக்கத்தில், எத்தகைய போக்கு மேலோங்கும் என்பதனைப் பொறுத்தே அவ்வியக்கத்தின் எதிர்காலம் அமையமுடியும்.

வெறுமனே எண்ணிக்கைக்காக ஆட்சேர்த்து, இந்நபர்களுக்கு பயிற்சிகளை வழங்கி, கைக்குண்டுகளுடனும் குழுக்களாகத் தெருக்களில் திரிய இன்று இவர்கள் விடப்பட்டுள்ளனர். இப்படித் திரிபவர்கள் எது போராட்டம் எனப் புரியாமல், சாதாரண பொதுமக்களையும், சகோதர இயக்கத்தினரையும் நோக்கி, தமது ஆயுதங்களை குறிபார்த்து மிரட்டுவதையே போராட்டமெனக் கருதி வருகிறார்கள். எதிரி தரப்பு இராணுவம் செய்யும் அதே அடாவடித்தனங்களையே செய்து வரும் இந்தக்கட்டுப்பாடற்ற நபர்கள், ஈழப் போராட்டத்திற்கு பெரும் கேடாக விளங்குகிறார்கள். அது மட்டுமின்றி இவர்கள் இயக்கங்களின் ஐக்கியத்திற்கும் பெரும் பாதகமான செயற்பாடுகளையும் செய்து வருகின்றனர்.

## இயக்கப் பிளவுகள் கொடுத்த சந்தர்ப்பம்

ஈழப்போராட்டத்தில், போராட்ட சக்திகளிடையே பிளவுகள் ஏற்பட்டதும் சமூகத்திலிருந்த வெவ்வேறு வர்க்கத்தினரும், இச்சக்திகளை தமக்குச் சார்பாகப் பயன்படுத்தத் தொடங்கியதே, இந்த விளைவுக்குக் காரணம்; அதாவது, இயக்கங்கள் பல, தாம் பாட்டாளிவர்க்கத்தின் அபிலாசைகளை பிரதிபலிப்பதாகவும், சோசலிச சமுதாயத்தை நிர்மாணிப்பதே தமது இலட்சியம் எனக்கொண்டாலும், இவர்களது நடவடிக்கைகள் இதற்கு மாறாகவே இருக்கின்றன. இவ்வியக்கங்களது மாறுபாடான செயற்பாடுகளினாலேயே, சமூகத்திலுள்ள தீய சக்திகளுக்கு இவர்கள் இரையாகியுள்ளனர்.

ஆனால், இந்தப் பாதிப்புக்குள்ளான இயக்கங்கள் இதை உணர்ந்து தம்மை புனரருத்தாரணம் செய்து கொள்ளும் நிலை இன்றில்லை. இதனாலேயே ஒரு இயக்கமோ அல்லது தரமான இயக்கக்கூட்டோ, போராட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கும் வரை, ஒற்றுமை சாத்தியமில்லை என்ற கருத்தை நாம் வலியுறுத்திவருகிறோம். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பொதுமை

# ஈழம்

திரைகடல் ஓடித்திரவியம் தேடிய தமிழனின் பரம்பரை, குடும்பங்களாகத் திரைகடலைத் தாண்டிய அகதிகளாக அலைகின்ற அவலநிலைகண்டு அவஸ்தைப்படுகின்றது. எமது உள்ளம் கண்காணிப்பு வளையங்களையும் தாண்டி கடற்படையினருக்கு சவால்விட்டு தமது வீடுவாசல்களையும் ஏனைய செல்வங்களையும் விட்டு உயிரைக் காப்பாற்றினால் போதும் என்ற அடிப்படையில் அகதிகளாக ஓடிச் செல்கின்றனர் நமது மக்கள்.

இந்தச்சூழல் குறித்து நாம் கவலை கொள்ளாமல் இருக்க முடியாது. வேதனையடையாமல் இருக்க முடியாது. நாளாந்தம் வருகின்ற செய்திகள் கடலைத்தாண்டி கரை சேரும் குடும்பங்களையும் அவர்களது எண்ணிக்கையினையும் எடுத்துச் சொல்வதாயுள்ளது எமது மக்கள் இந்த அடக்கு முறைகளையும் இராணுவ அடாவடித்தனங்களையும் எதிர்க்கவேண்டும் என்ற எண்ணத்தைவிடவும் தப்பித்துச் செல்வதிலேயே அதிக ஆர்வம் காட்டுகின்றனர் என்பதைக் குறிக்கும் ஒரு அளவீடாகும்.

சட்டரீதியாக மேற்கொள்ளப்பட்ட சிறிமா சாஸ்திரி உடன்பாட்டின் காரணத்தினால் எமதுமக்களில் ஒரு பகுதியினர் கட்டாய நாடு கடத்தலுக்கு கடந்த காலத்தில் உள்ளாக்கப்பட்டனர். அவ்வாறு பறிக்கப்பட்ட மக்களின் தாயகம் என்று நாம் கருதிய அந்த மண்ணில் கூட சீரான, வளமான வாழ்வை அமைத்துக் கொள்வதில் பட்டுக் கொண்டிருக்கும் இன்னல்கள், அனுபவிக்கும் வேதனைகள் எம்மவருக்கு ஒரு படிப்பினையாகுதல் அவசியம். மறுவாழ்வு குறித்துச் செய்யப்பட்டப் பிரச்சாரத்தின் கவர்ச்சியினால் இந்த மண்ணில் தமக்குள்ள உரிமையினை நிலைநாட்ட மறந்த அந்த மக்களின் கண்ணீர்க் காவியம் எமது மக்களால் புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்ருகும்.

மேலும் தாயகத்தின் விடுதலையே இலட்சியம் என்ற குறிக்கோளுடன் சிறிலங்கா அரசை ஆட்டங்காணச் செய்வதற்கு விடுதலை இயக்கங்கள் முயற்சிக்கும் இந்தவேளையில், இவ்வாறு நிகழும் வெளியேற்றம் சொந்த நாட்டின் மீது, சொந்த மண்ணின் மீது எமக்குள்ள பிடிப்பைப் பலவீனமாக்கும் ஒரு விடயமாகும். இந்த வகையில் பாலத்தீனம் போதிக்கும் அனுபவத்தை, பட்டறிவை நாம் புரிந்து கொள்ளவேண்டும் இசுரேலிய இராணுவத்தின் அடக்குமுறைகளாலும் நாளாந்த தொல்லையாலும் தமது சொந்தமண்ணை அதாவது பாலத்தீனை விட்டு வெளியேறி ஜோர்தானுக்கும் எகிப்துக்கும் சென்றமக்கள் இன்றுவரை தங்கள் தாயகத்தை மீட்டுக் கொள்ளாதது மட்டுமன்றி, தஞ்சம் புகுந்த நாடுகளில் இருந்தும் கூட ஈவிரக்கமின்றி வெளியேற்றப்பட்ட நிகழ்ச்சிகள் ஏராளம். தமது சொந்தமண்ணில் இருந்து அந்நியன் கணைக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் வெளியேறிவிட்டால் பின் தாயகத்தை மீட்பதுதான் எங்ஙனம்?

இன்றைய துன்பங்களையும் நாளைய விடுதலைக்கு உரமாக்கும் திடமனதும் இலட்சியத்தின் மீது கொண்ட தணியாத தாகமும் தான் இன்றைய உடனடித் தேவை. அதை விடுத்து அடக்குமுறைக்கு அஞ்சி ஓடத்தொடங்குவோமானால் எம்மனைவரையும் இந்நாட்டை விட்டுத் துரத்திவிட எதிரி கொண்டிருக்கும் கங்கணத்திற்கு வழி சமைத்தவர்களாகி விடுவோம். இது ஒரு பௌத்த சிங்கள நாடு எனப் பிரகடனம் செய்யவிழையும் எதிரியின் பணியை இலகுவானதாக்கி விடுவோம். மேலும் நிலவினிற்குப் பயந்து பரதேசம் போவது என்னும் முது தமிழ்ப் பழமொழியின் பரிகசிப்புக்கும் ஆளாவோம்.

அடுத்ததாக அகதிகள் வெளியேற்றும் என்பது அப்பட்டமான சுயநலத்தின் வெளிப்பாடே. நாளாந்தம் ஆயிரக்கணக்கானோர் அளவிறந்த இன்னல்களை அனுபவித்து வருகின்றபோது அவர்களோடு இணைந்துநின்று போராட்டத்தை முன்னெடுப்பதில் தயக்கம் காட்டும் சக்திகள்; விடுதலையை அதன் உள்ளடக்கத்தை ஜீரணிக்காத சக்திகள், தாம் மட்டுமே தப்பித்தால் போதும் என்ற அடிப்படையில் நாட்டைவிட்டு வெளியேறி வருவதைக் காணமுடிகின்றது.

அக்கரையில் இருந்து அமிர்தலிங்கம் இலட்சம் அகதிகள் தமிழ்நாட்டிற்கு வந்துவிடுவார்கள் என்றவாறு விடுக்கின்ற பத்திரிகை செய்திகள் இத்தகைய சக்திகளை ஊக்குவிக்கும் ஒரு செயலாகும். பெருமளவு அகதிகள் அக்கரை சென்றடைந்தாலே இந்தியா நேரடியாக இப்பிரச்சனையில் தலையிடும் என்று அவர்கள் கூற முனையும் சமாதானம் உண்மையில் மக்களின் போராட்ட உணர்வினை மழுங்கடிக்கச் செய்யவே பயன்படும். □

## இயக்கங்களின் ஒற்றுமைக்கு மதுரைக் கருத்தரங்கில் வலியுறுத்தல்

மதுரையில் நடைபெற்ற ஈழவிடுதலை இயக்கங்களின் கருத்தரங்கில் பேசிய மாணவர்கள் பலர், ஈழவிடுதலை இயக்கங்கள் ஒன்றிணைய வேண்டும் என்றும், இல்லையேல் இவர்கள் தனிமைப் படுத்தப்படுவார்கள் என்றும் கூறினர்கள். இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதனைக் கண்டித்து மதுரையில் அனைத்துக் கல்லூரி மாணவர்களின் கண்டன ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. 10000 க்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர். இதனையொட்டி ஈழவிடுதலை இயக்கங்கள் கலந்து கொள்ளும் கருத்தரங்கு நடைபெற்றது.

□

## இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு ஆதரவாக தமிழகத்தில் உண்ணுவிரதம்

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை ஒழிய வேண்டும். இவ் விஷயத்தில் மத்திய அரசு நேரடியாக தலையிட வேண்டும். இராமேஸ்வர மீனவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்று கோரி சென்னை, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் உண்ணுவிரதம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (தமிழ் நாடு பிரிவு) இதனை நடத்தியது.

□

## தமிழர்களின் நியாய பூர்வமான கோரிக்கைகள் வழங்கப்பட வேண்டும்

ஈழத் தமிழரின் நியாயபூர்வமான கோரிக்கைகளை சிறீலங்கா அரசாங்கம் வழங்கவேண்டுமென பாரதத்தின் அமெரிக்கத் தூதுவர் பாண்ஸ் தெரிவித்துள்ளார். அத்துலத் முதலி பாரதத்திற்கு விஜயம் செய்து திரும்பியுள்ள வேளையில் அமெரிக்கத் தூதுவர் சென்னையில் இவ்வாறு கூறியிருப்பது முக்கிய விடயமாகக் கருதப்படுகிறது.

□

## இந்தியாவின் அரசியல் தலையீட்டினை எதிர்த்து சான்பிரான்சிஸ்கோவில் சிங்களவர் ஆர்ப்பாட்டம்

ஈழத் தமிழர் பிரச்சனையில் இந்தியாவின் அரசியல் தலையீட்டைக் கண்டித்து அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோவில் வசிக்கும் சிங்களவர்கள் திரு வால்டர் ஜெயவர்த்தன தலைமையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தினர். இவர்கள் இந்தியா சிறீலங்கா மீது படையெடுக்கலாம் என்றும் அதை கண்டிப்பதாகவும் கோஷங்களை எழுப்பினர்; இவர்கள் தாங்கிச் சென்ற சுலோகமொன்றில் ''நான் இந்தியா, எனது இரவுணவாகச் சிறீலங்காவை உண்ணவிரும்புகிறேன்'' என்ற கருத்துடையதாகக் காணப்பட்டது.

□

## சிறீலங்காவினுடனை அரபு நாடுகளின் உறவு பாதிக்கப்படும்

இஸ்ரேலுடனை சிறீலங்காவின் உறவு அரபு நாடுகளுடனை இலங்கையின் உறவுகளைப் பாதிக்குமென அரபுலீக்கின் பிரதிநிதிகள் எச்சரிக்கை செய்துள்ளனர். அரபுலீக் இருபத்தியொரு அராபிய நாடுகளை உள்ளடக்கியது. இதன் நான்கு பிரதிநிதிகள் கொண்ட தூதுக்குழுவொன்று அண்மையில் சிறீலங்காவிற்கு வந்திருந்தபோது தேசிய பந்தோபஸ்து அமைச்சர் முதலியோரைச் சந்தித்து இவ்விடயம் பற்றி எச்சரிக்கை விடுத்துள்ளது.

□

## வியாபார ரீதியில் ஆயுதக் கொள்வனவு?

சிறீலங்கா அமைச்சர் அத்துலத்முதலியின் பிரித்தானிய பயணத்தின் முடிவில் பிரித்தானியா அரசு சிறீலங்காவிற்கு ஆயுத உதவி செய்ய மறுத்து விட்டதாயினும், இந்நாட்டின் தனியார் நிறுவனங்களிடம் இருந்து ஆயுதங்களையும் ரோந்துப்படகுகளையும் வியாபார ரீதியில் கொள்வனவு செய்வதற்கு அனுமதிஅளித்துள்ளது.

□

## வெளிநாடுகளில் ஈழ எதிர்ப்புப் பிரச்சாரம்

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஈழப்பிரசாரம் உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதைத் தொடர்ந்து சிறீலங்காவின் ராஜாங்க அமைச்சு, தேசிய பந்தோபஸ்து அமைச்சு, வெளிவிவகார அமைச்சு ஆகியன இணைந்து ஈழ எதிர்ப்புப் பிரச்சாரம் செய்யவுள்ளன. இவ்வமைச்சுகள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து ஐந்து சதவீதமான நிதியை இந்தப் பிரசாரத்திற்குச் செலவிடவுள்ளன.

□

## இலங்கைப் படுகொலைக்கு ஐ. நா. கண்டனம்

### இளைஞர்கள் சித்திரவதை செய்யப்படுவதை பிரித்தானிய எம். பி.க்கள் கண்டனம்

இலங்கையில் ஒழுக்கக் கேடான இராணுவம் தீவிரவாதிகளை பிடிப்பதற்குப் பதிலாக அப்பாவித்தமிழர்களையே படுகொலை செய்துவருவதாக ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் குழு கடுமையாக கண்டித்துள்ளது. சென்ற மாதம் இலங்கை வந்து சென்ற பிரித்தானிய எம்.பி.க்கள் திரு. சில்க், திரு. சிம் ஆகியோர் தாம் சிறைகளில் இரத்தக்காயங்களுடன் தமிழ் இளைஞர்களை சந்தித்ததாகவும், அவர்கள் கடுமையான சித்ரவதைகளுக்கு ஆளாகி வருவதாயும் இலங்கை அரசின் கேவலமான இராணுவமே இதற்குப் பொறுப்பென்றும் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். இவர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்ய அரசு அனுமதியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

□

1981 மே கலவரத்தை அடுத்து தமிழகத்தில் ஈழப் போராட்டத்தை எடுத்தியம்பும் ஏடாக ஆரம்பிக்கப்பட்ட 'பொதுமை, இதழ் 15 இதழ்கள் வரை தொடர்ந்து வெளிவந்தது. 83 கலவரத்தை அடுத்த நிகழ்வுகளால் தவிர்க்க முடியாமல் நிறுத்தப்பட்ட இவ்விதழ் மீண்டும் வெளிவருகிறது.

□ வெளியீடு : ஈழப் புரட்சி அமைப்பு 'EROS' □ தொடர்பு: த. பெ. எண்: 2356, சென்னை-600 024 □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்